திரு. மு. கருணாநிதி : தேசிய சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிராக மேற்படி படையினர் தேசியக் கொடிகளைப் பிடித்துக்கொண்டு தங்கள் கட்சிக்கு எதிரான கட்சிகளின் கூட்டங்களில் ஆர்ப்பாட்டம் செய்வது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேசியக் கொடிகளை வைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்களா இல்லையா என்பது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. இந்தப் படையினரை ஒரு புதிய தேசியக் கட்சியாக அரசாங்கம் கருதவில்லை.

Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act

* 1123 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) how far the Government have been successful in implementing the Beedi Industries Premises (Regulation of Conditions of Work) Act; and

(*b*) the steps taken to prevent the Trade Mark Beedi Proprietors from taking benami licences in the name of beedi agents and their workers?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Only the licensing provisions of the Act are in force now and these have been implemented successfully. During the nine months of the year 1960-61, 1,830 licences were issued to the employers of beedi industrial premises and during the year 1961–62, 289 employers were granted licences besides 1,216 employers, whose licences were renewed.

(*b*) The matter is under the consideration of the Government.

MR. SPEAKER : I think the House has no objection to taking some more time to dispose of the remaining questions.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாடு

* *1124 கேள்வி.*—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதியில் திருச்சியில் நடந்த தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் அரசாங்கத்திற்கு வந்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆம்.

பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டிக் கூட்டம்

* *1125 கேள்வி.*—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் ஜூலை கடைசி வாரத்தில் சென்னையில் கூடிய ராஜ்ய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் அரசாங்கத்திற்கு வந்தனவா ?